செய்தி வெளியீடு எண்: 31 நாள்: 24.06.2021.

**தேனி மாவட்டம்,**
**புதிய குடிநீர் அபிவிருத்திதிட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள**
**குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம்**
**பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்து**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

**********

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் குடிநீர் தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, வைகை அணை அருகே புதிய குடிநீர் அபிவிருத்திதிட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்து, இன்று (24.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தெரிவித்ததாவது,

தேனி மாவட்டத்தில் அனைத்துப்பகுதிகளிலும், பொதுமக்களின் குடிநீர் தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, தமிழக அரசால், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்து பகுதிகளிலும் சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, ஆண்டிபட்டி பேரூராட்சியில் மக்கள் தொகை 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 27,287 ஆகும். இப்பேரூராட்சியில் 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவில் -1, 2.50 லட்சம் லிட்டர் கொள்ளளவில் - 2, 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவில் - 5 எண்ணம் மற்றும் புதிதாக கட்டப்பட்ட 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவில் கொண்ட 4 எண்ணம் ஆகிய 12 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் நாள் ஒன்றுக்கு 33 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியை சுற்றிலும் உள்ள கிராமங்களின் தினசரி குடிநீர் தேவையை இதன் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

1972ம் ஆண்டு அரைப்படித்தேவன்பட்டி வைகை ஆற்றிலிருந்து 4 உரை கிணறுகள் அமைத்து 13 கிலோ மீட்டர் தூரம் 12", 10" மற்றும் 8" ஏ.சி. பைப்கள் மூலம் நாள் ஒன்றுக்கு 6.50 லட்சம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. மேலும் 2004ம் ஆண்டு ஆண்டிபட்டி சேடபட்டி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் பேரூராட்சிக்கு 13.00 லட்சம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்காணும் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் தினசரி 13.00 லட்சம் லிட்டரும், அரைப்படித்தேவன்பட்டி தலைமை நீரேற்று நிலையம், அடிபம்புகள்-6, திறந்தவெளிக்கிணறுகள், சிறுமின் விசைப்பம்புகள் 86 மற்றும் 7 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், 18 தரைமட்ட தொட்டிகள் மூலம் 8.70 லட்சம் லிட்டரும் சேர்த்து நாள் ஒன்றுக்கு மொத்தம் 21.70 லட்சம் லிட்டர் விநியோகம் செய்யப்பட்டது.

ஆண்டிபட்டி பேரூராட்சிக்கு 1972ல் போடப்பட்ட திட்டம் மிகப்பழமையானதாலும் மெயின் பைப் லைனில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு பராமரிப்பு செலவு கூடுதலாக ஏற்படுவதாலும், பதிக்கப்பட்டுள்ள 12" 10" ஏ.சி பைப்புகள் வெளி மார்க்கெட்டில் கிடைப்பதில் சிரமம் உள்ளதாலும் அனைத்திற்கும் மேலாக கோடைக்காலங்களில் வைகை ஆறு வறண்டு மோட்டார் இயக்க முடியாத சூழல் ஏற்படும் போது பேரூராட்சியில் மிகக்கடுமையான குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டது.

இந்நிலையை போக்கவும் தற்போது நகரின் விரிவாக்கம், மக்கள் தொகை பெருக்கம் மற்றும் வந்து செல்லும் வெளியூர் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் வைகை அணையிலிருந்து நீரேற்றம் செய்யும் வகையில் ஆண்டிபட்டி பேரூராட்சி புதிய குடிநீர் அபிவிருத்திதிட்டம் ரூ,1459 இலட்சத்தில் தமிழக அரசால் தொடங்கி வைக்கப்பட்டது.

மேற்படி திட்டம் வடிவமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு 2 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 1 எண்ணம், 1 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 3 எண்ணம், 10.60 கிமீ நீளத்திற்கு பம்பிங் மெயின், 6கிமீ நீளத்திற்கு குடிநீர் விநியோக குழாய்களும் அமைக்கப்பட்டு, தனியாக சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

ஆண்டிபட்டி சேடபட்டி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் பேரூராட்சிக்கு 11.00 லட்சம் லிட்டரும் ஆண்டிபட்டி பேரூராட்சி புதிய குடிநீர் அபிவிருத்திதிட்டம் மூலம் பேரூராட்சிக்கு 17.00 லட்சம் லிட்டரும் ஆக மொத்தம் நாள் ஒன்றுக்கு 28 இலட்சம் லிட்டர் குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 92.45 லிட்டர் வீதம் சீரான முறையில் தினசரி வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, ஆண்டிபட்டி வட்டத்திற்குட்ட வைகை அணைக்கு அருகில் ஆண்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக, புதிய குடிநீர் அபிவிருத்திதிட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) காளியப்பன், உதவி செயற்பொறியாளர் ராஜாராம், செயல் அலுவலர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**